2017 ஜூலை 13] [பேரவைத் தலைவர்]

அவர்களுக்குக் கொடுக்கிறேன். அவர் கேள்வி கேட்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. ஜெ. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சேலத்தில் துண்டுப் பிரசுரம் விநியோகித்த இரண்டு பெண்களை காவல் துறையினர் கைது செய்து,* remand *செய்யாமல் இருந்த நிலையில், சமூக ஆர்வலர் திரு. பியூஸ் மானுஷ் அவர்கள் நேற்று இரவு 11–00 மணி அளவில் நீதிபதி வீட்டின்முன் தர்ணா போராட்டம் நடத்தியிருக்கிறார். இதுவரையில் காவல் துறை அந்த இரண்டு பெண்களை* remand *செய்து இருக்கிறதா? நாட்டிலே பதற்றமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பெண்களை மாவோயிஸ்டுகள் என்று காவல் துறையினர் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற அந்த சேலம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை அவரின் கவனத்திற்குத் தங்கள்வாயிலாகக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குக் காலையிலேயே என்னுடைய அறைக்கு வந்து, இந்தப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால், அதற்கு உரிய பதிலை நான் வாங்கித் தந்திருப்பேன். நீங்கள் அதை என்னிடம் முன்பே சொல்லாததால், தாங்கள் பேசியதை மட்டும் அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

3. கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய ஐயத்திற்கு விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டமன்றத்தில் நான் இல்லாதபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமிப்பது குறித்து சபையின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறது என்றும், அதன்படி, கீழமை நீதிமன்றங்களில் நீதிபதிகளை இந்திய அளவிலே ஒரு தேர்வு நடத்தி, நீதிபதிகள்*

நியமிக்கப்படுவதாக ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். மத்திய அரசாங்கம் அந்த சுற்றறிக்கையை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியதன் வாயிலாக, உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து, அந்த சுற்றறிக்கையை ஒரு வழக்காகப் பதிவு செய்து, அந்த வழக்கின் விவரங்கள் குறித்து அனைத்து மாநில அரசுகளுக்கும், அனைத்து மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கும் அந்த வழக்கிலே பதில் அளிக்க வேண்டுமென்று, விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவுடனே, துறையின் சார்பாக உயர் நீதிமன்றத்திற்கு இதுகுறித்து விவரம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையில் இதற்கு விவரம் வரவில்லை. நான் துறையில் விசாரித்தவரையில், இதுவரை உச்ச நீதிமன்றத்திலிருந்து எந்தவித விளக்கமும், நோட்டீசும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அவ்வாறு வந்து சேர்ந்தவுடன், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாநில சுயாட்சியைக் காக்கின்றவகையிலே, நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்காத அளவிலே, கண்டிப்பாக மத்திய அரசாங்கத்திற்கு அரசின் சார்பாகவும் அழுத்தம் கொடுக்கப்படும். மாநில உரிமையைக் காப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி உச்ச நீதிமன்றத்தில் போராடி பல வெற்றிகளைப் பெற்றுத் தந்தார்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று உச்ச நீதிமன்றத்திலே, மூத்த வழக்கறிஞரை வைத்து, வாதாடி கண்டிப்பாக நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையைக் காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) தருமபுரி மாவட்டம், பன்னிகுளம் கிராமத்தில் கோழிப் பண்ணைக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது